REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 20உ வியாழன் (3—1—57) ★ ★ வெளியீடு: மார்கழி 21உ வெள்ளி (4—1—57) [இதழ் 177

பொத்தானை அழுத்தியதும் விரிவடையும் வண்டி!

ஒரு பொத்தானை அழுத்தினால் சாதாரண அளவைவிட ஐந்து மடங்கு அதிக அளவுக்கு விரிவடையும் ஒரு இழுத்துச் செல்லக்கூடிய வண்டி அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு வருகிறதாம்!

அலுமினியத்தால் தயாரிக்கப்படும் இவ்வண்டி வெளித் தோற்றத்தில் மற்ற வண்டிகளைப்போலவே இருக்கின்றதாம். பொத்தானை அழுத்தினதும், பக்கங்களிலுள்ள கதவுகள் திறக்கப்பட்டு ஐந்து நிமிடங்களில் 150 சதுர அடி அளவுள்ள அவ்வண்டியின் உள்பாகம் 780 சதுர அடியாக விரிவாகிறதாம்! இந்த இடத்தை, படுத்துத் தூங்கவோ, காட்சிப்பொருள்களை வைக்கவோ, கடை வைக்கவோ உபயோகித்துக் கொள்ளலாமாம்!

பொப்பிலியின் பணம் பெருத வெற்றி!

காங்கிரசாரின் பணம் மட்டும் எப்படிப் பெற்றுவிடும்?

கழகத்தின் வெற்றி தமிழகத்தில் மகத்தான மாற்றத்தைத் தோற்றுவிக்கும்

சேலம் பொதுக்கூட்டத்தில் அண்ணா முழக்கம்

"150 இடங்களில் போட்டியிடுகிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதிகமாகக்கூட அல்ல—ஒரு 50 இடங்களில், மக்கள் கழகத்திற்கு வெற்றி தேடித்தருவார்களேயானால், தமிழ் நாட்டு அரசியலில் மகத்தானதோர் மாற்றத்தைச் சிருஷ்டித்துக் காட்டுகிறோமா இல்லையா என்று பாருங்கள்.

"தடைசிவரையில் கிடையாது என்று பேசியவர்தானே நேரு பண்டிதர்?—ஆந்திர மாநிலம் மொழிவழியாக அமைக்கப்படவில்லையா? மக்கள் திரண்டெழுந்து நின்று உறுதியோடு தங்கள் இலட்சியத்தை வற்புறுத்துவார்களானால், நேரு பண்டிதர் நிச்சயம் இறங்கிவரத்தான் வேண்டும்.

"ஜனநாயகத்தில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாகவே 150 இடங்களில் போட்டியிடுகிறோம்; நாம் வெற்றி பெறுவது, மக்களின் விழிப்புணர்வைப் பொறுத்ததாகும். தோழர்கள் உறுதியோடு, எஃகு உள்ளத்தோடு தேர்தல் வேலையில் ஈடுபட வேண்டும்.

"காங்கிரசாரிடத்தில் உள்ள பணத்தைக் கண்டு எவரும் பயப்படத் தேவை இல்லை. பணத்தைக் கொண்டே கழகத்தைக் காங்கிரசார் வென்றுவிட முடியாது, நெடுநாட்களுக்கு!

"காங்கிரசாரிடம் பணம் இருக்கலாம்; ஆனால் அந்தப் பணத்திற்குப் பலம் இல்லை என்பதை அவர்களும் மக்களும், நமது கழகத் தோழர்களும் உணரவேண்டும்.

"நான் அடிக்கடி அறிவித்திருப்பதைப்போன்று, பணக்காரரிடமுள்ள பணம், குஷ்டரோகியின் கையில் உள்ள வெண்ணெய்க்குச் சமானமாகும்!

"ஏழையின் கையில் உள்ள பணம் அப்படிப்பட்டதல்ல! ஏழையின் கையிலிருப்பதற்குத்தான் 'நாணயமான நாணயம்' என்று பெயர்.

"பணக்காரரிடமுள்ள பணம் வெறும் நாணயமே தவிர, நாணயமானது—அந்தப் பொருளுக்குரிய தன்மை படைத்தது அல்ல!

"காதலியின் வியர்வைக்கு உள்ள மணத்திற்கும், ஊரைக் கெடுக்கும் வேசியின் மேனிப் பளபளப்பிற்குமுள்ள வித்தியாசம், ஏழையின் பணத்திற்கும் பணக்காரரின் பணத்திற்கும் உண்டு.

"பண பலத்தால், தேர்தலில் வென்றுவிடலாம் என்று கருதும் காங்கிரசார், பொப்பிலியால் ஏன் வெற்றிபெற முடியவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும்.

"நான பொப்பிலி சமஸ்தானத்திற்குச் சென்றிருக்கிறேன்—அவருக்கு தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக அந்த நாட்களில்! அப்போது அவர்—ஒருநாள் நான், காட்டொன்றில் பேசிவிட்டுத் திரும்பியபோது வீட்டில் இல்லை; இரண்டு நாள் கழித்து வந்து என்னைப் பார்த்தபோது, தான் வேட்டையாடிவந்த புலி ஒன்றை என்னிடம் காட்டினார்; நான் வேதனைப்பட்டேன்— அவருக்காக நாம் அடிவயிறு வலிக்க நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறோம்; அவரோ, காட்டுக்குச் சென்று வேட்டையாடி மகிழ்ந்துவிட்டு வருகிறாரே'— என்று!

"அப்படிப்பட்ட சீமான்கள் இன்று காங்கிரசில் இருக்கிறார்கள்; அவர்களது பணபலத்தால், தேசீய விடுதலை இயக்கமான கழகத்தை வென்றுவிடலாம் என்று காங்கிரசார் கருதினால், அது தவறான கணக்கு என்று கூற விரும்புகிறேன்."

என்று, அண்ணா அவர்கள், சேலம் 'வி' மார்க்கெட் திடலில், கடந்த 30—12—56 அன்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் முழக்கமிட்டார்கள்.

தொடர்ந்து பேசிய அண்ணா அவர்கள், மாணிக்கவேலர், இராமசாமி படையாச்சி போன்றவர்கள் மந்திரிகளான 'கதை'யையும், காங்கிரஸ் சர்க்காரின் கையாலாகாத்தனத்தையும், ஐந்தாண்டுத் திட்டத்தில் டில்லி சர்க்கார் தமிழ் நாட்டிற்கு இழைத்த வஞ்சகத்தையும் அநீதியையும், அந்தத் திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காக இந்த நாட்டு மக்களிடமிருந்து பெரும் செல்வத்தைப் பறித்துச் செல்லும் கொடுமையையும் விளக்கிப் பேசினார்கள்.

இலங்கையிலிருந்து துரத்தப்பட்ட மலையாளிகள்

'வாழ்வுதர முயற்சிக்கிறேன்' என்கிறார் கேரள கவர்னர்

'அவர்களே பார்த்துக் கொள்வர்' என்று கூறும் காமராசர் கவனிக்கட்டும்!

இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு தாயகம் திரும்பும் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்துவரும் காமராசர் சர்க்காருக்குப் பாடம் புகட்டும் வகையில், கேரள கவர்னர் ஓரிடத்தில் பேசியிருக்கிறார்.

இங்கு, 'அவர்களே பார்த்துக் கொள்ளுவர்' என்று காமராசர் பேசுகிறார். ஆனால், 'இலங்கையிலிருந்து திரும்பிவரும் மலையாளிகளுக்கு வாழ்வளிக்க சர்க்கார் முன்வரும்' என்று கேரள கவர்னர் தெரிவிக்கிறார்.

திருச்சூர் வட்டத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியைத் திறந்து வைத்துப் பேசுகையில், கவர்னர் இராமகிருஷ்ணராவ் 'இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு வந்துள்ள மலையாளிகளுக்கு எந்தவகையில் புனர்வாழ்வளிப்பது என்பதுபற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்; கூட்டுறவு முறையில், சிலதொழில்களை ஆரம்பிப்பதுபற்றி, அதிகாரிகள் கவனம் செலுத்துவர்' என்றெல்லாம் கூறியிருக்கிறார்.

இந்தப்போக்கு, காமராசர் சர்க்காரிடத்தில் காணப்படாததை தமிழர்கள், வரப்போகும் தேர்தலை மனதில் கொண்டேனும் உணரவேண்டும்.

இலங்கைக்கு உருளைக்கிழங்கு

சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்ய அனுமதி

இலங்கை சர்க்கார் கேட்டுக்கொண்டபடி, இலங்கைக்கு இந்தியாவிலிருந்து கொஞ்சம் உருளைக் கிழங்கு ஏற்றுமதி செய்ய வகை செய்யப்படும் என்று பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

சென்னைத் துறைமுகத்திலிருந்து மட்டுமே உருளைக்கிழங்கு ஏற்றுமதி அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக் கோரி உபயோகிப்போர் போராட்டம்

மின்சாரத்திற்குபதில் மண்ணெண்ணெய் தேடுகின்றனர்

சூரத், ஜன. 2—

உள்ளூர் மின்சார விநியோக நிறுவனத்தார் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாது விட்டதால், ராந்தர் எனும் ஊரைச் சேர்ந்த 200 வீட்டுக்காரர்கள், புத்தாண்டுத் துவக்கத்திலிருந்து, மின்சார விளக்குகளை உபயோகிப்பதை விடுத்து மண்ணெண்ணெய் விளக்குகளை உபயோகிக்கத் துவங்கியுள்ளனராம்.

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகள் பற்றிய தகராறு முடியும்வரை தங்களுக்கு மின்சார சப்ளை தேவை இல்லை என்று, 1,000 வீட்டுக்காரர்களில் 700 வீட்டுக்காரர்கள்வரை மின்சார நிறுவனத்திற்கு எழுதியுள்ளனராம்.

யூனிட் ஒன்றுக்கு இப்போது அந்த நிறுவனம் எட்டணா வசூலிக்கிறதாம். மின்சாரம் உபயோகிப்பவர்களோ, கட்டணம் 5 அணாவாகக் குறைக்கப்பட வேண்டுமென்று கோருகின்றனராம்.

காஷ்மீர் பிரச்சினையைப்பற்றி விவாதம் நடத்த ஐ. நா. பாதுகாப்பு அவையை கூடியவிரைவில் கூட்டுமாறு பாகிஸ்தான் அதிகாரபூர்வமாகக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது

'அதிகார தோரணையில் மதவிழாக்களில் கலந்துகொள்ளக்கூடாது'

'எல்லா மதங்களும் ஒரேவகையாக மதிக்கப்பட வேண்டும்'

டாக்டர் பராஞ்சிபே கருத்து

பம்பாய், ஜன. 1—

"ஒரு சமூக அமைப்பாகவும் உள்ள இந்து மதம், சாதி முறைக் கொள்கையோடு பிரிக்க முடியாதபடி இணைந்துகிடக்கிறது ஆனால், ஒரு மதச் சார்பற்ற சர்க்காருக்கு சாதிமுறை உடன்பாடானதாக — ஒத்துப்போகக் கூடியதாக இருக்கமுடியாது.

"எனவே, சர்க்கார் தனது நிர்வாகத் துறையில், சாதி முறை இடம் பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்,"

என்று, டாக்டர் பராஞ்சிபே அவர்கள், இந்தியப் பகுத்தறிவாளர் சங்க 5-வது மாநாடு பம்பாயில் நடைபெற்றபோது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் தனது உரையில் கூறியுள்ளதாவது:—

"நாட்டில் நிலவும் எல்லா மதங்களும், எந்தவித வேறுபாடுமின்றி சர்க்காரால்நடத்தப்படவேண்டியது தவிர்க்க முடியாத கடமையாகும்.

எந்த ஒரு மதத்திற்கும் தனிச் சலுகை தருவது என்பது கூடாது.

"எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்பதுடன், அப்படிப் பின்பற்றுவது சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் உட்பட்டதாகவும், நீதிக்கும் நேர்மைக்கும் ஒத்ததாகவும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் என்று அங்கீகாரம் தருவது தற்காலிகமானதாகவே இருக்கவேண்டும். சர்க்கார், தாழ்த்தப்பட்ட மக்களை இதர வகுப்பு மக்களின் அளவுக்கு நிலையில் உயர்த்துவதற்கு எல்லாவகையிலும் பாடுபட வேண்டும்.

"ஒருவர் தனது அதிகார தோரணையில், மத சம்பந்தப்பட்ட விழாக்களில் கலந்துகொள்வது, நமது மதச் சார்பற்ற சர்க்கார் என்ற நிலைக்குப் புறம்பானதாகும்."

இந்தூரில் காங்கிரஸ் திருவிழா

'தேர்தலுக்காக அல்ல' என்கிறார் தேபர்!

இந்தூர் ஜன. 2—

இந்தூரில், அகில இந்திய காங்கிரசின் 62-வது மாநாடு என்ற பெயரால், கோலாகலமான திருவிழா ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

இந்தத் திருவிழாவின் தலைவரான யு. என். தேபர், 'இந்தூர் மாநாடு, தேர்தலில் ஓட்டுப் பெறுவதற்காக அல்ல' என்று கூறியிருக்கிறார்.

வருகிற பொதுத் தேர்தலை காங்கிரஸ் ஒரு பரந்த விரிந்த நோக்கத்திலிருந்து பார்ப்பதாகவும் அவர் கூறினாராம்!

காங்கிரசில் கோஷ்டிச் சண்டை

தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிருப்தி அடைந்துள்ள நிலையில் சில காங்கிரசார் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர் என்று கூறப்படுவதை தேபர் மறுத்தாராம்! சிலரில் மட்டும்தான் சில மாவட்டங்களில் இதை ஒட்டி சிறு தகராறு எழுந்ததாகவும் அவர் கூறினாராம்!

1,400 அபேட்சகர்கள்

இதுவரை ஏழு மாநிலங்களில் 1,400 அபேட்சகர்கள்வரை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், எல்லா அபேட்சகர் தேர்வும் ஜன. 17, 18-ந் தேதிக்குள் முடிந்துவிடும் என்றும் அவர் கூறியுள்ளாராம்.

சென்ற ஆண்டில், சென்னை நகரப் படத்தயாரிப்பு நிலையங்களில் 85-ம், வெளியூர்களில் 15-ம், பம்பாயில் 2 படங்களுமாக மொத்தம் 102 படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—1—'57 வியாழன்

நெசவாளர்களே! எச்சரிக்கை!

இரண்டாவது திட்டக் காலத்தில், மக்களின் துணித் தேவை மிகுதியாகப் பெருகக் கூடும் என இந்தியப் பேரரசு எதிர்பார்க்கிறது. அவ்வாறு எதிர்பார்க்கப்படும் துணித் தேவையில் இருபது கோடி கெசத் துணியை, விசைத்தறிகளைக் கொண்டும் உற்பத்தி செய்வது என்று அவ்வரசு முடிவு கட்டியது.

அதற்காக 35,000 விசைத் தறிகளை, மாகாணங்கள் அனைத்துக்கும் இடையில் பரவலாக அளிப்பது என்றும் அவ்வரசு திட்டமிட்டிருக்கிறது. அத்திட்டத்தின்படிதான் சென்னையும் 'இவ்வாண்டில் 3,000 விசைத் தறியையும் அடுத்த ஆண்டில் 3,000 விசைத்தறியையும் புகுத்த இருக்கிறது' என்று சென்ற ஆண்டு ஆகஸ்ட் 13-ம் நாளில் சட்டசபையில் தொழில் அமைச்சர் அறிவித்திருந்தார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாடுகளில் விசைத்தறி ஏற்பாடும் ஒன்றாகும். திட்ட ஏற்பாடுகளில் பெரும்பாலானவை மாகாணங்கள் அனைத்திலும் பொதுவாகப் புகுத்தத்தக்கவைகளாகும். அப்பொதுவகையைச் சார்ந்ததுதான் இந்த விசைத்தறித் திட்டமும்.

விசைத்தறித் திட்டத்திற்குப் பலமான எதிர்ப்பு நாடு முழுவதும் உள்ள நெசவாளர்களிடமிருந்து கிளம்பிற்று. அரசியல் கட்சிகள் பலவும் ஒருமுகமாகத் திட்டத்தைக் கண்டித்துக் கைவிடுமாறு முழக்கமிட்டன.

விசைத்தறித் திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து ஒருமித்த எதிர்ப்பு கிளம்புவது கண்டதும், காங்கிரசுக் கட்சியினருக்கும் குழப்பம் ஏற்பட்டது. அவர்களும் வேண்டா வெறுப்பாக மக்கள் கோரிக்கைக்கு இணங்க வேண்டியவர்களாயினர். இறுதியாக அவர்களும் திட்டத்திற்கு எதிராகக் குரலெழுப்ப முன்வந்தனர்.

இவ்வளவுக்கும் காங்கிரசுக் கட்சியின் அதிகார மூனை அசைந்துகொடுக்கவில்லை. மக்களின் ஒருமித்த எதிர்ப்பு முழக்கத்தைப் பொருட்படுத்தாமல் மூடப் பிடிவாதமாக விசைத்தறி ஏற்பாட்டைச் செயலாற்றியே தீருவோம் என ஆணவமாகப் பேசிவந்தது.

அந்த ஆணவப் பிடிவாதக் கொக்கரிப்பின் சாரம்தான், சென்ற ஆண்டு ஆகஸ்ட் 13-ம் நாளில் 'இவ்வாண்டில் 3,000 விசைத் தறிகளையும், அடுத்த ஆண்டில் 3,000 விசைத்தறிகளையும் புகுத்தத் தீர்மானித்துள்ளோம்' என சென்னை சட்டசபையில் நிதிஅமைச்சர் கூறிவந்திருப்பது.

விசைத்தறியைப் புகுத்துவது என்று முடிவு கட்டி, அதற்கான விசைத்தறிகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு விட்ட பிறகு, இப்பொழுது விசைத்தறி ஏற்பாட்டைக் கைவிட அல்லது தற்காலிகமாக ஒத்திவைக்கப் போவதாக சென்னை நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

அது பற்றி சென்னை சட்டசபையில், 'விசைத்தறி புகுத்தும் ஏற்பாட்டை எதிர்ப்பதுதான் சென்னை அரசாங்கத்தின் கோட்பாடு' என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

விசைத்தறி ஏற்பாட்டை மேற்கொள்ளுவது என்ற பிரச்சினை கிளம்பியது முதற்கொண்டே அவ்வேற்பாட்டை சென்னை அமைச்சரவை எதிர்த்து வந்திருக்கிறதா என்றால், அதுதான் இல்லை. எதிர்ப்பதற்கு மாறாகத் திட்டத்தை மனப்பூர்வமாகவும் தீவிரமாகவும் ஆதரித்து வந்திருக்கிறது. அதுவுமன்றி, விசைத்தறியைத் திணிப்பதற்கான காலத்தையும் குறிப்பிட்டதுடன், விசைத்தறியின் தொகையையும் குறிப்பிட்டுத் திட்டத்தைச் செயலாற்றுவதில் முனைந்திருந்தது.

திட்டத்திற்கு எதிராகக் கிளம்பிய எதிர்ப்பை எல்லாம் துச்சமாக மதித்து வந்தது. எதிர்ப்பாளர்கள் அனைவருக்கும் அரசியல் மாசும் கற்பித்து வந்திருக்கிறது அமைச்சரவை!

ஆனால் எதிர்பாராவகையில், 'விசைத்தறி திட்டத்தை எதிர்ப்பதே சென்னை அரசாங்கத்தின் கொள்கை' என்று, திட்டத்தை முதற்கண் ஆர்வமாக ஆதரித்து வந்த அதே தொழில் அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் இப்பொழுது உரத்துப்பேச முன்வந்திருக்கிறார்.

எனவே, இப்படி எதிர்ப்புக்கு இணங்காது முதற்கண் விசைத்தறி ஏற்பாட்டை முழு விருப்புடன் ஆதரித்துவந்த காமராசர் அமைச்சரவை, அவ்வாறு ஆதரித்துவந்ததிலிருந்து பின்வாங்க இப்பொழுது முன்வந்து இருக்கிறது என்றால், அதற்கு ஏதாவது பொருத்தமான காரணம் இருந்தாக வேண்டும். அந்தப் பொருத்தமான காரணம் என்ன?

விசைத்தறித் திட்டத்தை முன்னாள் ஆதரிக்க முனைந்ததும், இந்நாள் ஆதரிக்க மறுப்பதும், கொள்கை அளவில் தம் அமைச்சரவைக்கு உண்மையான மனமாற்றம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதையும் தொழில் அமைச்சர் பக்தவத்சலனார் விளக்கிக்கூறி இருக்கவேண்டும். பொதுமக்களுக்கு அமைச்சரவை ஆற்ற வேண்டிய கடமைகளில், இவ்வாறு விளக்கம் கூறுவதும் ஒன்று என்பதைத் தொழில் அமைச்சர் உணர்ந்து நடந்து கொண்டு இருக்கவேண்டும். நிற்க,

விசைத் தறி ஏற்பாட்டைப் புகுத்துவது குறித்துத் தம் அமைச்சரவையின் கருத்து என்ன என்பதை சென்னை சட்டசபையிலேயே வெளிப்படையாக தொழில் அமைச்சர் கூறி இருக்கும்பொழுது, சென்னைக்கு வந்துள்ள (விசைத்தறி வம்பர்) நித்தியானந்த கனுங்கோ என்ற இந்தியப் பேரரசின் அமைச்சர், "தங்களுக்குத் தேவைப்படும் விசைத்தறியின் எண்ணிக்கையை சென்னை அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறவில்லை" என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். அத்துடன், அவ்வாறு சென்னை அரசாங்கம் கூறாததற்கும் காரணமாக "இந்த விவகாரத்தை அமைய இருக்கும் புதிய ஆட்சி முடிவு கட்டிக் கொள்ளட்டும் என எண்ணுவதாக இருக்கக்கூடும்" என்றும் அறிவித்துள்ளார்.

பேரரசு அமைச்சரின் மேற்படி கூற்றிலிருந்து நாம் எண்ணக்கூடியது என்ன?

விசைத்தறி ஏற்பாட்டை எதிர்ப்பதுதான் தங்கள் கருத்தாகும் என தொழில் அமைச்சர் பக்தவத்சலனார் சென்னை சட்டசபையில் வெளிப்படையாகக் கூறினபோதிலும், அவ்வெதிர்ப்புக் கருத்தை அமைச்சரவை இன்னும் உள்ளத் தூய்மையுடன் ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் நாம் யூகிக்க வேண்டியவர்களாகிறோம். அப்படி உள்ளத் தூய்மையுடன் விசைத்தறித் திட்டத்தைக் காமராசர் அமைச்சரவை எதிர்ப்பதாக இருக்குமானால், அவ்வெதிர்ப்புக் கருத்தை அழுத்தம் திருத்தமாக இந்தியப் பேரரசிற்கு இதற்குள்ளாக அறிவித்திருக்க வேண்டும். அவ்வாறு அறிவிப்பதில் தயக்கம் இருப்பதற்கும் நியாயமில்லை.

விசைத்தறியை எதிர்க்கிறோம் என்ற தங்கள் முடிவை இந்தியப் பேரரசிடம் சென்னை அமைச்சரவை இதுவரை அறிவிக்காததிலிருந்து, நாம் ஒரே ஒரு முடிவிற்குத்தான் வர வேண்டியவர்களாகிறோம். அதாவது, சட்டசபையில் விசைத்தறியை எதிர்ப்பதுதான் தங்கள் அமைச்சரவையின் கொள்கை என வெளிப்படையாகத் தொழில் அமைச்சர் கூறியது, இங்குள்ள நெசவாளர்களைத் திருப்தி செய்வதற்குக் கூறப்பட்ட அரசியல் பசப்பு மொழியே என்ற முடிவிற்குத்தான் நாம் வரவேண்டியதாக இருக்கிறது. நிற்க,

விசைத்தறி ஏற்பாட்டில் நெசவாளர்களின் வருமானம் உயரும் என்றும், வருவாய் பெருக்கத்தினால் நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் கூடும் என்றும், விசைத்தறித் திணிப்புக்குக் காங்கிரஸ் அமைச்சர்கள் அனைவரும் நியாயம் பேசி வந்தனர். அவ்வாறு உண்மையிலேயே நெசவாளர்கள் கூலி உயர்வு பெறுவதையும் கூடுதலான நல்வாழ்வு பெறுவதையும் காமராசர் அமைச்சரவை மனப்பூர்வமாக விரும்புவதாக இருந்தால், எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டபோதிலும், அதற்கு அஞ்சாது—பணிந்து கொடுக்காது விசைத்தறியைப் புகுத்தி நெசவாளர்களுக்கு சிறந்த வாழ்க்கை வசதிகளைத் தேடித்தருவதில் பிடிவாதமாக இருந்திருக்கவேண்டும். அதுதான் இலட்சிய வெற்றிக்காக ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்களின் தலைசிறந்த கடமையுமாகும்.

ஆனால் காமராசர் அமைச்சரவையோ விசைத்தறி ஏற்பாட்டை எதிர்ப்பதாகக் கூற முன்வந்து இருக்கிறது. அப்படி எதிர்ப்பதின் மூலம், அமைச்சரவை கூற்றுப்படி நெசவாளர்கள் பெறக்கூடிய வருவாயை, நெசவாளர்களுக்குக் கிட்டாமலிருக்கச் செய்ய காமராசர் அமைச்சரவை முடிவு கட்டியும்விட்டது.

சென்னை காங்கிரசு அமைச்சரவையின் இந்த விசைத்தறித் திருவிளையாடலைத்தான் நாம் தேர்தல் திருவிளையாடல் என்கிறோம். இம்முடிவை உறுதி செய்யும் வகையில்தான், விசைத்தறித் திணிப்பில் நமது காங்கிரசு அமைச்சரவை முன்னுக்குப்பின் முரணாகவும், இலட்சிய நோக்கின்றியும் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நெசவாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிந்த பிறகு எப்படியும் விசைத்தறி திணிக்கப் படும் என்ற உண்மையை, பேரரசு அமைச்சர் கனுங்கோ வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். எனவே, நெசவாளர்கள், தேர்தல் காலத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள முன்வரவேண்டும்.

இலட்சியப் பற்றின்றி பதவி பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு செயலாற்றிவரும் பச்சைத் தமிழர் காமராசர் அமைச்சரவைக்கு, நெசவாளர்கள் தேர்தலில் நல்ல பாடம் கற்பிக்கவேண்டும். தவறிவிடும் பட்சத்தில், கைநெசவை நசுக்கச் செய்யக் கூடியதும், பெரும்பாலான நெசவாளர்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்கக்கூடியதுமான விசைத்தறி ஏற்பாடு எதிர்காலத்தில், அதாவது தேர்தலுக்குப் பிறகு திணிக்கப் பட்டுவிடும் என்பதை நெசவாளர்கள் மறந்துவிடக்கூடாது. எச்சரிக்கை!

நாடு கடத்தப்பட்டுள்ள விடுதலைப் போர்த் தலைவர்

மகாரியஸ் பாதிரியார் சிறை மாற்றப்படுவார்

ஏதன்ஸ், ஜன. 1—

சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவரான மகாரியஸ் பாதிரியார் நாடுகடத்தப்பட்டு, செய்செல்லஸ் தீவில் சிறைவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே! அவர் இப்போது மால்டா தீவுகளுக்கு சிறை மாற்றம் செய்யப்படுவாராம். அங்கு அவர், கிரேக்க சர்க்காருடனும் சைப்ரஸ் பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொள்ள வாய்ப்பிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆங்கிலம் கட்டாயப் பாடமாக வேண்டும்

"உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், ஆங்கிலக் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட வேண்டும்" என்று அகில இந்திய ஆங்கில ஆசிரியர்கள் மாநாடு ஒன்றில் 'தீர்மானம்' நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'வடமொழிக்கும் தமிழுக்கும் பல பேதங்கள் உண்டு'

'வேதவியாக்கியானங்களே இதற்குச் சான்று'

'வடமொழிப் பண்பும் தமிழ்ப் பண்பும் வெவ்வேறானவை'

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் கருத்துரை

"சென்ற 200 ஆண்டுகளாகத் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. இனி மேல் தமிழ் நல்ல வளர்ச்சி யுறும் என்பதில் சந்தேகமில்லை.

"வடமொழிக்கும் தமிழுக்கும் பல பேதங்கள் உள்ளன; இது, வேதவியாக்கியானங்களைப் பார்த்தாலே தெரியும்.

"வடமொழிப் பண்பும், தமிழ் மொழிப்பண்பும் வெவ்வேறு விதமானவை. ஆகவே, விஞ்ஞானப் பதங்களுக்கு வடமொழிப் பதங்களைத் தமிழில் கொள்ளலாம் என்பது சரியாகாது. தமிழ்ப் பண்புகள் வளரவேண்டும்,"

என்று, சென்னை மேல் (சட்ட) சபையில், தமிழ் ஆட்சி மொழி மசோதாமீது பேசுகையில், நாமக்கல் கவிஞர் வி. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைப் பெரிய மருத்துவமனையில் 1956 நவம்பர் திங்களில் மட்டும் 4,457 பேர் அவசர காலச் சிகிச்சை பெற்றிருக்கின்றனராம்!

இவர்களில் 590 பேர் விபத்துக்குள்ளானோர் என்றும், மதுவிலக்கு சம்பந்தப்பட்டவர்கள் 833 பேர் என்றும் கூறப்படுகிறது.

டிசம்பர் மாதத்தில் மொத்தம் 4,860 பேர் அவசரகாலச் சிகிச்சைக்கு வந்தனராம்; இவர்களில் விபத்துக்குள்ளானோர் 617 பேர்; மதுவிலக்கில் சம்பந்தப்பட்டவர்கள் 208 பேர்.

'ஆங்கிலம் நீடிக்கத்தான் வேண்டும்'

"தாய்மொழியில் போதனை வேண்டுமென்கின்றனர், பலர்; ஆங்கிலத்தில்தான் நீடிக்கவேண்டும் — இல்லாவிடில் உயர்தரப் படிப்பு குட்டிச்சுவராகிவிடும்— அகில-இந்தியத் தொடர்பு அற்றுப் போய்விடும்—தேச ஐக்கியம் சிதைந்துவிடும்' என்று அஞ்சுவோரும் நிறைய இருக்கிறார்கள்.

"இந்தியாவது, தேசமெங்கும் காலேஜுகளில் போதனு மொழியாவது சாத்தியமல்ல. பிரதேச மொழிகள் அந்த அந்தஸ்தைப் பெறுவது அவசியமென வாதிக்கமுடியும். எனவே, ஆங்கிலத்தின் மூலமாகத்தான் அகில-இந்தியத் தேவைகளை இன்னும் ஒன்றிரண்டு தலைமுறைகளுக்கேனும் நாம் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

"எனவே, இப்பொழுது, ஆங்கிலத்துக்குக் காலேஜ் படிப்பில் உள்ள முக்கியத்தை எந்த அளவுக்கு மாற்றினால், தேச ஒற்றுமைக்கும் உயர் படிப்புக்கும் அபாயமிராது—தாய் மொழி மூலம் போதனை நடைபெறலாம் என்பதையும் சமரச உணர்ச்சியுடன் கவனிக்க வேண்டியிருக்கிறது.

"ஆங்கிலத்தை இவ்வளவு வசதியுள்ளதாகக் கருத வேண்டியிருக்கையில், அகில-இந்திய அரசாங்க மொழியாக அது நீடிக்க வேண்டிதான் இருக்கும்."

—'தினமணி': 29-12-56

மலபார் மாவட்டம் மூன்ருகப் பிரிகிறது

சில விவரங்கள்

கள்ளிக்கோட்டை, சன. 1—6,400 சதுர மைல் பரப்பளவுடனும், 51 இலட்சம் மக்கள் தொகை கொண்டதும், சென்ற அக். இறுதி வரையில் சென்னை மாநிலத்துடன் சேர்ந்திருந்துமான மலபார் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

கண்ணனூர் மாவட்டம் (தலைகர் கண்ணனூர்); கோழிக்கோடு (தலைகர் கோழிக்கோடு) மாவட்டம்; பாலக்காடு மாவட்டம் (தலைகர் பாலக்காடு) — ஆகியவை மூன்று புதிய மாவட்டங்களாகும்.

கண்ணனூரின் மக்கள் தொகை 12½ இலட்சம்; கோழிக்கோடு மக்கள் தொகை 21 இலட்சம்; பாலக்காடு மக்கள் தொகை 17½ இலட்சமாகும்.

தேர்தலின் மகிமையே மகிமை!

விரும்பாவிட்டால் விசைத்தறியை ஏற்கத் தேவையில்லையாம்!

டெல்லி மந்திரியின் சாகசம்!

சென்னை, சன. 1—தேர்தலின் மகிமையே மகிமை! எவரெவரை, எப்படி எல்லாம் ஆட்டி வைக்கிறது இந்தத் தேர்தல்!

'எவர் எதிர்ப்பையும் பொருட்படுத்த மாட்டோம் — கினைத்ததை செய்தே தீருவோம்,' என்று பேசியவர்கள், தேர்தல் வருகிறது என்றதுமே எப்படி எல்லாம் தங்கள் குரலை மாற்றிக் கொள்கிருர்கள்?

விசைத்தறி!

'எவர் எதிர்த்தாலும், விசைத்தறியைத் திணித்தே தீருவோம்,' என்று பேசினர் டில்லி பெரியவர்கள், அப்போது!

இப்போதோ! 'வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள்! விருப்பமில்லாவிடின் விட்டுவிடுங்கள்!' என்கின்றனர்.

தங்கள் 'எதிர்ப்பை'ப் பொருட்படுத்தாத டில்லி எசமானர்களுக்கு, அப்போது 'ஆமாம்' போட்டனர் சென்னை சர்க்கார்! இப்போது?

மத்திய நுகர்ப் பொருள் உற்பத்தி இலாகா மந்திரி கனுங்கோ என்பார், இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறியிருப்பதைப் பாருங்கள்:—

விரும்பாவிடில்

"டில்லியின் முடிவு எதுவானாலும் அதனை அமுல் செய்யவேண்டியவர்கள் மாநில சர்க்கார்களே! எனவே, உதாரணமாக சென்னை சர்க்கார் விசைத்தறியின விரும்பவில்லை என்ருல், நிச்சயமாக, அவர்கள் அதனை ஏற்கத் தேவை இல்லை" என்று அவர் கூறினராம்!

கோவை மாவட்டத்தில் சட்டசபை, பார்லிமெண்டு தொகுதிகள்

கோவை மாவட்டத்தில் 18 சட்ட சபைத் தொகுதிகளும், 5 பார்லிமெண்டு தொகுதிகளும் இருக்கின்றன. தொகுதி நிர்ணயக் கமிஷன், பொதுத் தேர்தலுக்கென கீழ்க்கண்டவாறு தொகுதிகளைப் பிரித்திருக்கிறது:—

சட்டசபைத் தொகுதிகள்:

1 உடுமலை—குடிமங்கலம் பிர்கா நீங்கலாக—1 இடம்
2 பொள்ளாச்சி—கோவில்பாளையம், கிணத்துக்கடவு பிர்காக்கள் நீங்கலாக—2 இடங்கள்
3. கோவில்பாளையம்—கோவில்பாளையம், கிணத்துக்கடவு, உடுமலைத் தாலுகா குடிமங்கலம் பிர்கா அடங்கியது—1 இடம்
4. தாராபுரம் — தாராபுரம், குண்டடம், மூலனூர் பிர்காக்கள்—1 இடம்
5. காங்கயம் — தாராபுரம் தாலுகா, காங்கயம், வெள்ளக்கோவில், கோமங்கலம் பிர்கா—1 இடம்
6. சென்னிமலை — ஈரோடு தாலுகா, கொடுமுடி, சிவகிரி, சென்னிமலை பிர்காக்கள்—1 இடம்
7. ஈரோடு—ஈரோடு தாலுகா, ஈரோடு, மொடக்குறிச்சி பிர்காக்கள்—1 இடம்
8. பெருந்துறை — ஈரோடு தாலுகா, பெருந்துறை, வைத்தக்குளி பிர்கா—1 இடம்
9. பவானி—பவானி தாலுகா பவானி, கூகலூர், தாளவாடி பிர்காக்களும், கோபி தாலுகாவில் காட்டுப் பிரதேசமும்—2 இடங்கள்
10. கோபி—வாணிபுதூர், சத்தியமங்கலம் பிர்காக்கள், கோபி தாலுகா—1 இடம்
11. நம்பியூர்—நம்பியூர், புஞ்சைபுளியம்பட்டி பிர்காக்கள் கோபி தாலுகா—1 இடம்
12 திருப்பூர்—பல்லடம் தாலுகா, திருப்பூர், பொங்கலூர் பிர்கா—1 இடம்
13. பல்லடம்—பல்லடம் தாலுகா, பல்லடம், வாரப்பட்டி பிர்கா, கோவை தாலுகா, மதுக்கரை பிர்கா—1 இடம்
14. கோவை-1—கோவை முனிசிபாலிடியில் 6 முதல் 29 வார்டுகள்—1 இடம்
15. கோவை-2—மதுக்கரை, சர்க்கார் சாமக்குளம், முனிசிபாலிட்டியில் 6/29 வார்டுகள் நீங்கலாக கோவை தாலுகா—2 இடங்கள்
16. சூலூர்—பல்லடம் தாலுகா, சூலூர், கோவை தாலுகா, சர்க்கார் சாமக்குளம் பிர்கா—1 இடம்
17. அவிநாசி—அவிநாசி தாலுகாவில் மேட்டுப்பாளையம், சிறுமுகை பிர்காக்கள் நீங்கலாக—1 இடம்
18. மேட்டுப்பாளையம்—மேட்டுப்பாளையம் சிறுமுகை பிர்காக்கள்—1 இடம்.

பார்லிமெண்டு தொகுதிகள்:

1. பொள்ளாச்சி — உடுமலை, பொள்ளாச்சி, தாலுகாக்களும், தாராபுரம் தாலுகாவில் தாராபுரம், குண்டடம், வேலூர் பிர்காக்களும்—1 இடம்
2. நாமக்கல்—பெருந்துறை, வைத்தக்குளி பிர்கா நீங்கிய ஈரோடு தாலுகா, பொள்ளாச்சித் தொகுதியிலுள்ள பிர்காக்கள் நீங்கிய தாராபுரம் தாலுகா, சேலம் நாமக்கல், ஆத்தூர் தாலுகாக்கள் வெண்ணந்தூர் பிர்கா நீங்கிய இராசிபுரம் தாலுகா, திருச்சி, கரூர் தாலுகாவில் அரவக்குறிச்சி, பரமத்தி, சின்னதாராபுரம் பிர்காக்கள்—2 இடங்கள்
3. கோபி—கோபி, பெருந்துறை தாலுகாக்கள், ஈரோடு தாலுகாவில் பெருந்துறை, வைத்தக்குளி பிர்காக்கள்—1 இடம்
4. கோவை—சர்க்கார் சாமக்குளம் பிர்கா நீங்கிய கோவை சூலூர் பிர்கா நீங்கிய பல்லடம் தாலுகா—1 இடம்
5 நீலகிரி—நீலகிரி மாவட்டத்தில், அவிநாசி தாலுகா, கோவை சர்க்கார் சாமக்குளம் பிர்கா, பல்லடம் தாலுகா, சூலூர் பிர்கா—1 இடம்.

பெண்கள் கல்வி

முன்னேற்றத்திற்கு இந்திய சர்க்கார் நடவடிக்கையாம்!

துவக்கக் கல்வி, நடுத்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி, ஆசிரியர்கள் பயிற்சி ஆகிய எல்லாக் கட்டங்களிலும் பெண்கள் கல்வியின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக இந்தியப் பேரரசு விசேட நடவடிக்கைகளை எடுத்து வருகிறதாம்!

பெண்கள் கல்வியின் பரவலுக்காகவும், பெண் ஆசிரியர்களின் பயிற்சிக்காகவும், மத்தியக் கல்வி இலாகாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் ரு 3,35,00,000 செலவில் திட்டமொன்று சேர்க்கப்பட்டிருக்கிறதாம்.

புகார்களுக்குப் பின்னர் புதிய உத்தரவு

முசாபர்பூர், சன. 1—'வழிகாட்டி கார்டு'கள் உயர்தர வகுப்பு பிரயாணிகளுக்கே உதவியளிப்பதாக புகார் கிடைத்ததால், இனி அவர்கள், எல்லா வகுப்புப் பிரயாணிகளுக்கும் உதவியளிக்க வேண்டும் என்று இரயில்வே இலாகா ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதாம்.

****

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணு அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜனவரி	ஜனவரி
15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	20: மதுரை நகர்
16: காஞ்சிபுரம்	21: திருச்சி நகர்
17: சேலம் நகர்	22: குமாரபாளையம்
18: உடுமலை	23: போளூர் வ.ஆ.
19: கணியூர்	24: விழுப்புரம்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

வளரும் விஞ்ஞானத்தால்....!

சந்திர மண்டலப் பயணம் விரைவிலேயே சாத்தியமாகலாமாம்!

மனிதர் ஏறிச்செல்லாத ரக்கெட் பற்றி சோவியத் ஆராய்ச்சியாளர் தரும் விவரம்

மிகவும் குறைந்த அளவு எரிபொருளை உபயோகித்து, சந்திர மண்டலத்தைச் சுற்றிவரும் ராக்கெட் பயணம் சம்பந்தமான திட்டத்தைத் தயாரித்துள்ள ரஷ்யப் பேராசிரியர் செபோடரியோவ், அதுபற்றிக் கூறுவதாவது:—

பிரபஞ்ச வெளிப் பிரயாணம் சம்பந்தமான துணிச்சலான திட்டங்கள் பல, போதிய எரிபொருள் இல்லாததினுல் தோல்வியடைந்திருக்கின்றன; இதுவரையிலும் இப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருந்துவந்துள்ளது. மனிதர்கள் ஏறிச்செல்லாத ராக்கெட் கப்பலை சந்திரமண்டலத்திற்கு அனுப்புவதென்ருல்கூட, பல்லாயிரக்கணக்கான டன் எடையுள்ள எரிபொருள் தேவைப்படும்.

இந்த ராக்கெட்டானது, பூமியின் வெளிமண்டலத்தைத் தாண்டிய பிறகு, பூமி, சந்திரன் இவ்விரண்டின் ஆகர்ஷண சக்தியின் உதவியால், தொடர்ந்து பிரயாணம் செய்யும்.

புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து முடியும் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக ராக்கெட் கப்பல் பிரயாணம் செய்கிறது. பூமியிலிருந்து சந்திரனுக்கும், பிறகு சந்திரனிலிருந்து பூமிக்கும் உள்ள தூரம் பூராவையும் 286 மணி நேரத்திற்குள்—அதாவது, சுமார் 10 நாட்களுக்குள் இது பிரயாணம் செய்துவிடும். இப்பிரயாணத்தின் தூரம் சுமார் 4,16,666 மைல்களாகும்.

ராக்கெட் முதலில் புறப்படும் போது, விநாடி ஒன்றிற்கு சுமார் 4½ மைல் வேகத்தில் பறக்கும். இதற்குக் குறைவான வேகத்தில் பறந்தால் பூமியின் ஆகர்ஷண சக்தியை மீறிக்கொண்டு முன் செல்வது முடியாமல் போய்விடும். சந்திரமண்டலத்திற்கு அருகாமையில் ராக்கெட்டின் வேகம் குறையத் தொடங்கி, இறுதியில் ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறது.

'ராக்கெட் எவ்வாறு பூமிக்குத் திரும்பிவரும்?' என்று கேட்கப்பட்டபோது அவர் கூறியதாவது:—

பிரயாணத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பூமியின் ஆகர்ஷண சக்திக்கு ராக்கெட் கப்பல் உட்படுத்தப்படுவதினுல், அது பூமியிலிருந்து புறப்பட்டபோது கிளம்பிய அதே வேகத்தில் பூமிக்குத் திரும்பி வந்துவிடும். பூமியில் திரும்பிவந்து விழும்போது, சேதம் ஏற்படாதிருக்கும் பொருட்டு, ராக்கெட் கப்பலுடன் ஒரு விசேஷ பாரஷூட் சாதனம் பொருத்தப்படும்.

ராக்கெட்டைக் கிரக வெளிக்குள் அனுப்பிவைக்கிறோம்; அது சந்திர மண்டலத்தைச் சுற்றிவருகிறது; பிறகு பூமிக்கே திரும்பிவிடுகிறது. இதேபோல், சந்திரனுக்கு நேராகச் சென்று, சந்திரனிலேயே இறங்கித் தங்கியிருப்பதற்கான பயணத்திற்கு அவசியமான புள்ளிவிவரங்களையும் தயாரிக்க முடியும்.

சந்திரனைச் சுற்றிவரும் இந்தப் பிரயாணத்தின் பலனுக, விஞ்ஞானத்திற்குக் கிடைக்கும் ஆதாயம் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

தானுகவே பதிவு செய்துகொள்ளும் பல்வேறு வகையான இயந்திர சாதனங்கள் இதில் பொருத்தப்பட்டிருப்பதால், கிரக மண்டலத்தின் தன்மையையும் குணுதிசயங்களையும் பற்றிய புதிய விவரங்களை நாம் தெரிந்துகொள்ளமுடியும். விண் கற்களின் சஞ்சாரம் சம்பந்தமாக நமக்குக் கிடைத்துள்ள விவரங்களை மீண்டும் சரி பார்க்கவும், வானிலை ஆராய்ச்சி பற்றியப் புதிய விவரங்களைத் தெரிந்துகொள்ளவும் உதவும்.

பூமியிலுள்ள நாம், சந்திரனுடைய ஒரு பகுதியைத்தான் பார்க்க முடிகிறது; ஆனுல் ராக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள சினிமா காமிராக்களாலும் புகைப்படக் காமிராக்களாலும் எடுக்கப்படும் ஏராளமான படங்களின் உதவியுடன், சந்திரனுடைய மற்றொரு பகுதியை நாம் முதல் தடவையாகக் கண்ணுறும் வாய்ப்பு ஏற்படும்.

மிக அதிக தூரத்திற்கு அப்பாலிருந்து, பூமியை போட்டோ பிடிப்பதினுல்கூட, பல விசேடமான விஷயங்களை நாம் பார்ப்பது சாத்தியமாகும்.

'இதே முறையில் செவ்வாய் கிரகத்திற்கு ராக்கெட்டை அனுப்புவது சாத்தியமா?' என்ற கேள்விக்கு அவர் தந்துள்ள பதில்:—

செவ்வாய் கிரகத்திற்கும் பிரயாணம் செய்வது சந்திரமண்டலப் பிரயாணத்தைவிட மேலும் சிக்கலானதாகும். சந்திரமண்டலப் பிரயாணத்திற்கு பூமி, சந்திரன், ராக்கெட் ஆகிய மூன்றின் ஈர்ப்பு, எதிர் ஈர்ப்பு சக்திகளைமட்டும் கணக்கிலெடுக்க வேண்டியிருந்தது. ஆனுல், செவ்வாய் கிரகப் பிரயாணத்தில் சூரியன், வெள்ளி, புதன் ஆகிய கிரகங்களுடைய செல்வாக்கையும் கணக்கிடவேண்டியிருப்பதால் அவற்றின் வான நூல் கணக்கு புள்ளிவிவரங்களைத் தயாரிப்பது கடினம்; என்ருலும், செவ்வாய் கிரகத்தைச் சுற்றிவிட்டு பூமிக்குத் திரும்பும் ராக்கெட்டைப் பற்றிய ஆராய்ச்சிகளையும், அதன் பிரயாண மார்க்கத்தை நிர்ணயிக்க அவசியமான புள்ளிவிவரங்களையும் தயாரித்து வருகிறோம்.

சந்திரனுக்கு ராக்கெட் கப்பலை எப்போது அனுப்பிவைப்பது சாத்தியமாகும் என்பது பற்றி அவரது கருத்தாவது:—

தொழில்நுட்ப முன்னேற்றம் இப்போது வெகுவாக வளர்ந்துள்ளதினுல், இத்தகைய ராக்கெட்டை அமைத்து, அதன் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்வது முற்றிலும் சாத்தியமே. பூமியைச் சுற்றிவரும் உபகிரகம் ஒன்றைத் தயாரித்து, அதைப் பிரபஞ்ச வெளியில் விடுவதிலேயே நாங்கள் இப்பொழுது முழு கவனம் செலுத்தி வருகிறோம். இந்த வேலை முடிந்தவுடன், சந்திரனைச் சுற்றிவரும் ராக்கெட் பயணம் சம்பந்தமான பிரச்சினை அனேகமாக எடுத்துக் கொள்ளப்படலாம். சந்திரமண்டலப் பிரயாணம் ஒரு சில ஆண்டுகளில் சாத்தியமாகலாம் என்பது எனது துணிபு.

கல்லூரி படிப்புக்கான புதிய திட்டம்

ரூ. 21 கோடி செலவாகுமாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், நாடு முழுமையிலும் 500 உயர்தரக் கல்லூரிகளிலும், 250 இண்டர்மீடியட் கல்லூரிகளிலும் மூன்ருண்டு பட்டப் படிப்பு முறையைப் புகுத்துவதற்கு ரூ. 21 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இச்சீர்திருத்த முறைக்கு இன்னும் சில பல்கலைக் கழகங்கள் தயாராகவில்லையாதலால், மாறுதலைச் செய்வதற்குத் தயாராக உள்ள பல்கலைக் கழகங்களில் மட்டிலும் இவ்வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு ரூ. 15 கோடி போதுமானதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இத்தொகையில் பாதியான ரூ. 7½ கோடியை இந்திய சர்க்காரும் பல்கலைக் கழக மானியக் குழுவும், மற்றொரு ரூ. 7½ கோடியை மாநில சர்க்கார்களும் தனிப்பட்ட கல்வி ஸ்தாபனங்களும் ஏற்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

கழகத் தோல்வியுமல்ல! கம்யூனிஸ்டு வெற்றியுமல்ல!

எஸ்.சி.வி. கோபால் வெற்றி பற்றிய உண்மை

கழகத்திற்கு தோல்வி என்ற பித்தலாட்டத்திற்கு மறுப்பு

I

ஐயா,

அண்மையில் சென்னை 14-வது வட்டத்தில் நகரசபைத் துணைத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் திரு. எஸ். சி. வி. கோபால் அவர்களும், திரு. ஆர். லோகநாதன் அவர்களும் மற்றும் 4 பேர்களும் போட்டியிட்டார்கள் திரு. எஸ் சி. வி. கோபால் அவர்களுக்கு ஆலமரமும், திரு. லோகநாதன் அவர்களுக்கு உதயசூரியனும் சின்னங்களாக அமைந்தன.

தேர்தலில் திரு. கோபால் அவர்கள் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

31—12—56-ந் தேதியிட்ட 'ஜனசக்தி' நாளிதழில், திரு கோபால் அவர்களின் வெற்றி கம்யூனிஸ்டுக் கட்சியின் மகத்தான வெற்றியென்றும், திரு. லோகநாதன் அவர்களின் தோல்வி தி. மு. கழகத்தின் தோல்வியென்றும், உண்மைக்கு மாறாகத் தேர்தல் முடிவைக் குறித்து தி. மு. கழகத்தையும், எமது அருமைத் தலைவர்களையும் இழித்தும் பழித்தும் எழுதியிருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தி. மு. கழகத்தின் நூற்றுக்கணக்கான தொண்டர்கள்—வாக்காளர்கள், திரு. கோபால் அவர்களின் வெற்றிக்காக இரவு பகலெனப் பாராமல் உழைத்திருப்பதை இந்த நன்றிகெட்டவர்கள் மறந்துவிட்டார்கள்.

உண்மையிலேயே கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அந்தப் பகுதியில் பலமிருப்பதாக நினைத்தால், திரு. கோபால் அவர்களை இராஜிநாமா செய்யச் சொல்லிவிட்டு, கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் மறு தேர்தலுக்கு நிற்கட்டும். தி. மு. க.-வின் சார்பில் திரு. லோகநாதன் அவர்களையும் நிற்கவைக்கலாம். பிறகு தேர்தல் முடிவைக் காணட்டும்.

நடந்த தேர்தலில், சின்னங்களைக் கொண்டு மட்டும் வெற்றி தோல்வியைக் கணக்கிட்டு, அதன் மூலம் தனது கட்சிதான் செல்வாக்குப் பெற்றது என்று 'ஜனசக்தி' நினைத்தால், அது பகற்கனவுதான் என்று எச்சரிக்கின்றோம்.

திறமை - தகுதி - நேர்மை- ஜனநாயகப் பண்பாடு ஆகியவை 'ஜனசக்தி'க்கு இருந்தால், அதே பகுதியில் மறு தேர்தலுக்குத் தயார் செய்யட்டும் என்று அறைகூவி அழைக்கிறோம்.

வி முனுசாமி, எம். சி.,
நாரண - தாமோதரன்
சி. வரதராசன்
வி. எஸ் சோலையப்பன்
வி எஸ் முகம்
ஆ. சொக்கலிங்கம்
மதிவாணன்
டி எம் கே நஸீர்

II

ஐயா,

சென்னை 14-வது வட்டநகரசபை துணைத் தேர்தலில், தோழர் எஸ். சி. வி. கோபால் உள்ளிட்ட அறுவர் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். அதில் தோழர் எஸ். சி. வி. கோபால் அவர்கள் வெற்றிபெற்றதைக் குறித்து 31-12-56-ந் தேதியிட்ட 'ஜனசக்தி' இதழில் வெளிவந்திருக்கும் செய்தி உண்மைக்குப் புறம்பானதும், கடைந்தெடுத்த பித்தலாட்டமுமாகும்.

14-வது வட்டத்தில் நின்ற எந்த உறுப்பினரும் கட்சியின் சார்பாகவோ, கட்சியின் சின்னங்களைத் தாங்கியோ தேர்தலில் நிற்கவில்லை.

வெற்றிபெற்ற தோழர் எஸ். சி. வி. கோபால், இருமுறை சுயேச்சையாக நின்று தோற்றார் என்ற காரணத்தாலும், கடந்த தேர்தலில் காங்கிரஸ் செய்த தில்லுமுல்லுகளாலும் வட்ட மக்களின ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்று வெற்றிபெற முடிந்தது.

தோழர் கோபால் அவர்களின் வெற்றிக்குக் கட்சி பேதமின்றி தி. மு. கழகத் தோழர்களும் தமிழரசுக் கழகத் தோழர்களும், தூய உள்ளம் படைத்த காங்கிரசுக்காரர்களும், இரவு பகலென்று பாராது அயராது உழைத்தனர் என்பது, 14-வது வட்ட மக்களுக்கே தெரியும். நிலைமை இவ்வாறிருக்க, 'தி.மு. கழகம் லோகநாதனை நிறுத்திப் போட்டியிட்டது' என்று கூறும் கம்யூனிசக் கண்றோட்டத்தை—கோயபெல்ஸ் பிரசாரத்தைப் பொதுமக்கள் நம்பிவிடுவார்கள் என்று கருதுவது, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுவதேயாகும்.

தோல்வியுற்ற தோழர் லோகநாதன் 'உதயசூரியன்' சின்னத்தைப் பெற்றுவிட்டதாலேயே, அவரை தி. மு. கழகம் நிறுத்தியது என்றும், அத்தோல்வி தி. மு கழகத்தின் தோல்வி என்றும் கூறுகின்ற அகில உலக வாதிகளுக்கு; வெற்றிபெற்ற சின்னம் கதிர் அரிவாளல்ல—ஆலமரம் என்பதையும் நினைவுபடுத்துகிறோம்.

வெற்றிக்கு உடனிருந்து பாடுபட்டவர் 9-வதுவட்ட நகரசபை உறுப்பினரும் அவ்வட்ட தி மு. கழகச் செயலாளருமான தோழர் வி. முனுசாமி என்பதையும், அதேபோல், 14-வது வட்ட தி மு கழகத் தோழர்களும் அவரது வெற்றிக்குப் பாடுபட்டனர் என்பதையும், யார் பெற்ற பிள்ளையோ தான் பெற்ற பிள்ளை—என்று துணிந்து உறவு கொண்டாடும் 'மாஸ்கோ சீடர்கள்' மழுங்கலாமே ஒழிய, மக்களும் தோழர் எஸ். சி. வி. கோபால் அவர்களும் மழுக்கவும் மாட்டார்கள்—மறக்கவும் மாட்டார்கள் என்பதை 'அரசியல் குருடர்'களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகின்றேன்

கோ. செங்குட்டுவன்
துணைச் செயலாளர்,
சென்னை மாவட்ட தி.மு.க.

III

ஐயா,

சென்னை 14-வது வட்ட நகரசபை துணைத்தேர்தலில் சுயேச்சையாக நின்ற தோழர் எஸ். சி வி கோபால் அவர்களுக்கு நான் என்னுடைய முழு உழைப்பையும் அளித்துப் பாடுபட்டேன். எஸ் சி வி. கோபால் அவர்களது வெற்றியில் என் பங்கையும் செலுத்தினேன். எனவே, 31—12—56 அன்று நடைபெற்ற வெற்றி ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டதுடன், என் இல்லத்தில் கழகக் கொடிகட்டி, அவருக்குக் கைத்தறித்துண்டு அணிவித்துப் பாராட்டினேன்.

அதுமட்டுமல்ல; 14-வது வட்டத் தி. மு. கழகச் செயலாளரும் தோழர்களும், கழகக் கட்டிடத்திற்கு முன்பாகக் கைத்தறி ஆடையை அணிவித்து அவரைப் பாராட்டினர்.

உண்மை இவ்வாறிருக்க, தி. மு கழகத்தினர் குழப்பம் விளைவித்ததாக 1—1—57 'ஜனசக்தி' இதழில் எழுதி, தேய்ந்துவரும் தன் கட்சியை ஒரு வட்டத் துணைத் தேர்தல் முடிவை தனது எனக் கருதிக்கொண்டே வளர்க்கலாம் என்று பகற்கனவு காணுகின்றனர்.

அந்தோ பரிதாபம்! உண்மையை, தன் பத்திரிகை மூலம் மறைத்து மக்களை ஏமாற்ற முடியாது. மக்கள் உண்மையை உணர்ந்துதான் இருக்கின்றனர்.

நாரண—தாமோதரன்
செயற்குழு உறுப்பினர்,
14-வது வட்ட தி.மு. கழகம்

கழகக் கூட்டம்

★

புதுப்பட்டு கிராமம்:
5—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பொன்னுசாமி
பேசுவோர் :
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
வே. அ. இளஞ்செழியன்

காஞ்சிபுரம் கே.வி.கே.சாமி படிப்பகத் திறப்புவிழா

5—1—57 மாலை 6-மணிக்கு காஞ்சிபுரம் பிள்ளையார்பாளைய மண்டபத் தெருவில் தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் கே. வி. கே. சாமி படிப்பகத் திறப்புவிழா நடைபெறும் தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ் தென்னரசு பேசுவர்.

பாக்குமீது வரி உயர்த்தப்படுகிறது

பாக்குமீது இறக்குமதி வரியை மத்திய சர்க்கார் உயர்த்தியிருக்கிறது.

12½ அணவாக இருந்த விசேடரகத்துக்கு ரூ 1—0—6 ஆகவும் சாதா ரகத்துக்கு 12 அணுவிலிருந்து 1 ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிற இந்த வரி ஜன. 1-ந்தேதியிலிருந்து அமுலுக்கு வருமென்று தெரிகிறது.

ஆப்கானிஸ்தானிலும் ஐந்தாண்டுத் திட்டம்!

ஆப்கானிஸ்தான் சர்க்கார் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்துள்ளனராம். இந்தத் திட்டத்திற்கான நிதித் தேவைகளை, அமெரிக்காவும் ரஷ்யாவும் வழங்குமாம் உலக பாங்கிகூடக் கொஞ்சம் உதவ முன்வந்துள்ளதாம்.

சுமார் 43 கோடி டாலர் இந்தத் திட்டத்தின்கீழ் முதலீடாகத் தேவைப்படுமாம்.

அன்னிய முதலாளிகளையும் முதலீடு செய்யுமாறு ஆப்கான் சர்க்கார் கோரியிருக்கிறதாம்.

திட்டத்தின் ஒரு பெரும் பகுதி —7 கோடி டாலர் வரை விவசாய முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படுமாம்.

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

5—1—57 மாலை 5½ மணிக்கு, சென்னை 4-வதுவட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில், வண்ணை இராபின்சன் பூங்கா அருகிலுள்ள மணி கண்டமுதலி 6-வதுதெருவில், தோழர் டி. கே. சாமி தலைமையில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத்; கே. கோவிந்தசாமி, மு. பெருமாள், மாணவி சற்குணம் ஆகியோர் பேசுவர்.

சேலம்—அம்மாப்பேட்டை தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு

5-1-56 இரவு 8 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை தி. மு கழகக் கட்டிடத்தில், கழகச் செயற்குழுக்கூட்டம் நடைபெறும். கழக வரவு - செலவு, மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 4-1-57 மாலை 6-30 மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
திரு எம். இராதாகிருஷ்ணபிள்ளை பி ஏ பி எல் அவர்கள் தலைமையில்
என். எஸ். கே. நாடக சபா அளிக்கும்
'தளபதி' தமிழ் நாடகம்
தனிப்பகுதி : ரூ. 3, 2, 1, அணா 8. திறந்தவெளி இலவசம்
சென்னை கவர்னர் உயர்திரு ஏ ஜே ஜான் அவர்கள் பாராட்டிய உஷா வீணை வாத்தியம், சர்க்கஸ், தந்திரக்காட்சி, ஓவியக்கலை, பம்பாய் நடனம், பொம்மலாட்டம், ராட்டினம், மயில் தஞ்சாவூர் குதிரைகள் நாட்டியம், மறுபிறவி மகாத்மா காந்தி தேகப் பயிற்சி சைக்கிள் விளையாட்டு மற்றும பல.—பொருட்காட்சி பகல் 2 மணி முதல் இரவு 10 மணிவரை. பிரவேசக் கட்டணம் 0—5—0
எம். எஸ் மோகன்—காண்டிராக்டர்

நீதிமன்றக் கிளைக்காக நடைபெறும் அறப்போரில் புதிய கட்டம்

மேயர், மக்கள் சபை உறுப்பினர் உட்பட பலர் கைது

திருவனந்தபுரம், சன. 2—

திருவனந்தபுரத்தில், உயர்நீதிமன்றக் கிளை ஒன்று நிறுவவேண்டுமெனக் கோரி நடைபெற்றுவரும் போராட்டம், இன்று புதியதொரு கட்டத்தை அடைந்துள்ளது.

திருவனந்தபுரம் நகரசபைத் தலைவர் (மேயர்) பொன்னரா ஸ்ரீதர் என்பாரும், சி. நாராயணபிள்ளை என்ற மக்கள் சபை உறுப்பினரும், இன்னும் 4 தலைவர்களும் இன்றைய மறியல் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சர்க்கார் தலைமை அலுவலகத்தின்முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தை ஏராளமான மக்கள் கூடிநின்று கவனித்திருக்கின்றனர்.

முன்னாள் அட்வகேட்-ஜெனரலான குஞ்சு கிருஷ்ணபிள்ளை என்பவர் உட்பட மேலும் 24 தொண்டர்கள், மறியலில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டோரில் பல வழக்கறிஞர்களும் உள்ளனர்.

நீதிமன்றக் கிளை அல்லது துப்பாக்கிக் குண்டு

'எங்களுக்கு உயர் நீதிமன்றக் கிளை வேண்டும்; தருகிறீர்களா, அல்லது துப்பாக்கிக் குண்டுகளைத் தருகிறீர்களா?' 'கவர்னரே, இராஜிநாமாச் செய்!'—என்பன போன்ற கோஷங்களை எழுப்பியிருக்கின்றனர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்!

7,000 மத்திய சர்க்கார் ஊழியர்கள் சம்பளம் வாங்க மறுப்பு

தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வெற்றிகரமான போராட்டம்

சென்னை, சன. 2—

சென்னை நகரில் இருக்கும் மத்திய சர்க்கார் அலுவலகங்களில் பணிபுரியும் சுமார் 7,000 ஊழியர்கள் இன்று தங்களின் டிசம்பர் திங்கள் சம்பளத்தை வாங்க மறுத்துவிட்டிருக்கின்றனர்.

வெற்றிகரமாக நடைபெற்றுள்ள இந்த 'சம்பள மறுப்பு'ப் போராட்டம், தங்களின் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

மத்திய சர்க்கார் ஊழியர்கள் 'கான்பெடரேஷன்' மேற்கொண்ட முடிவுப்படி இந்தப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்க வேண்டும்; கிராக்கிப் படி உடனடியாக உயர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற தங்களின் கோரிக்கையை சர்க்கார் அலட்சியப்படுத்தி வருவதைக் கண்டிக்கவும், கோரிக்கைகளின் அவசர அவசியத்தை வற்புறுத்தவுமாக ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

வருமான வரி இலாகா, விமானப் போக்கு - வரத்து இலாகா, தபால்-தந்தி இலாகா முதலிய அலுவலகங்களைச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

நாடெங்கிலும்...!

புதுடில்லி, சன. 2—

இந்தியாவின் தலைநகரான டில்லியிலும், மற்றமுள்ள 14 மாநிலங்களிலும், மத்திய அரசாங்க ஊழியர்கள் இன்று சம்பளம் வாங்க மறுத்துள்ளனர்.

அ. இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர்

ஆமதாபாத், சன. 2—

டாக்டர் அம்பேத்கார் இயற்கை எய்தியதால் அவருக்குப் பதிலாக பீ. கெய்க்வாட் என்பார், அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் சம்பந்தமாக எழுபேர் கொண்ட ஒரு 'பார்லிமெண்டரி போர்டு' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தெரிந்து கொள்ளுங்கள்

சென்னை, சன. 1—

1956-ம் ஆண்டில் மொத்தம் 16½ இலட்சம் அடி நீளமுள்ள 102 திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட்டனவாம்.

இவைகளில், மொத்தம் 26,500 அடி நீளம் தணிக்கைக் குழுவால் வெட்டப்பட்டிருக்கிறது.

தணிக்கைக்கு வந்த 102 படங்களில் 33 படங்கள் மட்டுமே எந்தவிதக் குறைத்தலும் இல்லாமல் அனுமதிக்கப்பட்டனவாம்.

ஒரு படத்தில் மட்டும்—உயர்ந்தபட்ச அளவாக 2,255 அடி நீளம் வெட்டப்பட்டிருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.